## புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்திட்டம் - 2023

--------------------------------------------------------------------------------

புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிகூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவரிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 ஒக்தோபர் 02 ஆம் திகதிய 101104 எல் ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 2016 நவம்பர் 18 ஆம் திகதிய சீஎல்கே 101104 எல் ஆம் இலக்க திருத்தப்பட்ட கடன் உடன்படிக்கையின் 3.4.3(எச்) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் கடன் வசதி உடனபடிக்கைகளின் பிரகாரம், மின்வலு அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. எரிசக்தி மின்சார விநியோக அமைப்பு உறிச்சல் இயலளவை அதிகரித்து சராசரி உற்பத்திக் கிரயங்களை குறைப்பதன் மூலம் தேசிய மின்சார விநியோக அமைப்பிற்கு புதுப்பிக்கத்தக்க சக்தியை உறிஞ்சுதலே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மாலிபொட, வெவல்வத்த, நாவலப்பிட்டிய, றாகல போன்ற இடங்களில் 132/33 கேவி உப நிலைய கட்ட நிர்மாணம் என்ற பெயரில் நான்கு கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. கடன் வசதி உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 6,660.10 மில்லியனிற்குச் சமமான யூரோ 41.10 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 4,865.90 மில்லியனிற்குச் சமமான யூரோ 30 மில்லியன் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவரால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 1,794.20 மில்லியனிற்கு சமமான 11.1 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2018 சனவரி 06 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 ஒக்தோபர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2023 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

2023 திசெம்பர 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தினி நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய

பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

மாலிபொட, வெவல்வத்த, நாவலப்பிட்டிய, றாகல போன்ற இடங்களில் 132/33 கேவி உப நிலைய கட்ட நிர்மாணம் பகுதியளவு பூர்த்தியாக்கப்பட்டு 2022 ஏப்ரல் 30 இல் இலங்கை மின்சார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது .

### 2.2 நிதிகளின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாருடைய பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவரால் ஒதுக்கப்பட்ட யூரோ 30 மில்லியனில், தொகையானதுடன் அதில் செயற்திட்ட மற்றும் ஏனைய செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக ரூபா 4,365.13 மில்லியனிற்குச் சமமான யூரோ 22.89 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்ட மற்றும் ஏனைய செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக 2020 பெப்ரவரி 25 இல் செயற்திட்டத்திற்கு பெறப்பட்ட ரூபா 491.12 மில்லியனிற்குச் சமமான யூரோ 2.5 மில்லியன் மூன்றாவது முற்பணத்தை பயன்படுத்துவதற்கு 03 ஆண்டுகளிற்கு மெலாக கையேற்றிருந்தது. மேலும், அத்தகைய முற்பணத்தில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விசேட (யூரோ) கணக்கில் இருந்த நிதிகளின் பயன்பாடு காலாவதியானமையால் ரூபா 84,968,301 இற்குச் சமமான யூரோ 232,267 பயன்படுத்தப்படாடல் கொடையாளருக்கு திருப்பி அனுப்ப வேண்டியிருந்தது. | முகாமைத்துவ கருத்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | கடன் பெறுகைகளை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.3 காணிச் சுவீகரிப்பு தொடர்பான பிரச்சனைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாருடைய பரிந்துரை |
|---|---|---|
| வெவல்வத்தை உப மின்நிலைய நிர்மாணத்திற்காக 1.4508 ஹெட்டயர் காணித் துண்டுகளை சுவீகரிப்பதற்காக ரூபா 5,867,156 ஆன இழப்பீட்டு கொடுப்பனவிலுள்ள தாமதம் காரணமாகஇழப்பீட்டின் 44 சதவீதத்தை பிரதி நிதித்துவப்படுத்துகின்ற ரூபா 2,586,950 ஆன தொகை வட்டிக் கட்டணங்களாக ஏற்பட வேண்டியிருந்தது. | முகாமைத்துவ கருத்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | மேலதிக கிரயத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |